*மே 11, 2015*

**ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது**

*இனிமையான குழந்தாய்: நீ 84-பிறவிகளின் சக்கரத்தை நிறைவு செய்துவிட்டாய். குழந்தைகளாகிய நீங்கள் இந்த விழிப்புணர்வை கொண்டிருக்கவேண்டும். நீங்கள் மீண்டும் இராஜ்ஜியத்தைப் பெறுவதற்கு உதவி செய்யவும் உங்களைத் தமோபிரதானிலிருந்து சத்தோபிரதானமாக்குவதற்கும் பாபா வந்திருக்கின்றார் என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் உலகின் அதிபதிகளாக இருந்தீர்கள்; நீங்கள் தெய்வங்களாக இருந்தீர்கள்.*

*இனிமையான பாபா, நாள் பொழுதில் இந்த விழிப்புணர்வை நான் மீண்டும் உறுதி செய்திக் கொள்கின்றேன்: நான் 84 பிறவிகளின் சக்கரத்தை நிறைவு செய்துவிட்டேன் என்றும், நான் எவ்வாறு உலகின் மாஸ்டராக இருந்தேன் மேலும் நான் எப்படித் தொடர்ந்து கீழே வந்தேன் என்றும் படிப்பை நினைவு செய்வேன்.*

**சமார்த்தி அல்லது சக்தி**

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

**மனோ-விருத்தி அல்லது மனோபாவம்**

*பாபா ஆத்மாவிற்கு: பாபாவிடமிருந்து உங்களைத் திசை திருப்பும் முக்கியமான குறைபாடு, மற்றவர்களைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருப்பதும் தீய விஷயங்களைக் கேட்பதும் பேசுவதும் ஆகும். தந்தையின் வழிக்காட்டல்: தீய விஷயங்களைக் கேட்க வேண்டாம். குழந்தைகளாகிய நீங்கள் ஒருவரின் கதைகளை மற்றொருவரிடம் சொல்லிக் கொண்டிருக்கும் வியாபாரத்தில் ஈடுபடக்கூடாது. மேலும் அவருடைய கதைகளை இவரிடமும் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. வீண்பேச்சை துறக்கவேண்டும்.*

*நான் துறவு மனப்பான்மையை மேற்கொள்வதில் உறுதியாக இருக்கிறேன். நான் மற்றவர்கள் பற்றிச் சிந்தித்துகொண்டிருப்பதைத் துறந்து விடுவேன். நான் என்னுடைய மனதை மற்ற அனைவரிடமிருந்தும் திருப்பி ஒரே ஒரு இராமரிடம் யோகம் கொண்டிருப்பேன்.*

**திருஷ்டி அல்லது தூய பார்வை**

*பாபா ஆத்மாவிற்கு: தந்தை உடலற்றவர். ஆத்மாக்களாகிய நீங்களும் கூட உடலற்றவர்கள்.*

*நான் இன்று சந்திக்கும் அனைவருக்குள்ளும் இருக்கும் உடலற்ற ஆத்மாவை பார்க்க உறுதியாக இருக்கிறேன்.*

**ஒரு அலையை உருவாக்குதல்**

நான் மாலை *7:00* மணி முதல் *7:30* மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஒரு அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.

குறிப்பு *1: சாய்வு* வார்த்தைகள் அந்தநாள் முரளியிலிருந்து தொகுக்கப்பட்டவை.

குறிப்பு *2:* இந்த வண்ணத்தில் இருக்கும் வார்த்தைகள் ஒவ்வொரு நாளும் மாறாமல் இருக்கும்.